மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை

*ஒ.எஸ்.34/2017*

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ம் நாள் புதன்கிழமை

வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி உதவியாளர் திரு.M.முருகன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : பிரேமா | சாதி : |
| த-பெ/க-பெ : ஹெர்பர்ட் பால்ரூடி | சமயம் : |
| கிராமம் : | தொழில் : |
| வட்டம் : | வயது : |

**வா.சா.2 பிரேமா ஆஜர்**
**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை:**

வழக்கு சொத்தை யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் லட்சுமணனிடம் வாங்கினேன். எந்த தேதியில் வாங்கினேன் என்றால் 01.09.1995 ஆகும். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தீர்ப்புரை பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் நான் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு எந்த தேதியில் தீர்ப்பானது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கு நான் கிரையம் பெற்ற பின்பு தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை மேற்படி தீர்ப்பின் பேரில் சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த மேல்முறையீடு வழக்கில் எனக்கு எதிராக தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் பிரதிவாதிகள் வாதிகள் பெயரில் ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்யக்கோரி வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் என் பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா ரத்து செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வருவாய் கோட்டாட்சியர் உத்தரவின் பேரில் தான் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டது என்றாலும் நான் பிராதில் சொல்லியுள்ளது போல் மோசடியாக பட்டா மாறவில்லை என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து மாவட்ட வருவாய் அலுவலர் மேல்முறையீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலரும் வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவை ஊர்ஜிதம் செய்து கடந்த 14.06.2018ம் தேதிக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால்

சரிதான். தாவா சொத்து ஆதியில் பிரதிவாதி தந்தை பெயரில் பாத்தியம் ஏற்பட்டு பட்டா இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தில் தவறுதலாக லட்சுமணன் பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் சரியல்ல. தவறுதலாக ஏற்பட்ட பட்டாவை பிரதிவாதியின் தந்தை உரிய காலத்தில் மனு செய்து பட்டா மாறுதல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 02.09.1995ம் தேதியன்று பிரதிவாதியின் பெயரில் மீண்டும் பட்டா மாறுதல் ஏற்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பட்டா வழங்கியதால் தான் லட்சுமணன் பட்டாவை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 28.01.2013ம் தேதியிட்டு என் பெயரில் கணினிப்பட்டா ஏற்பட்டுள்ளதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதில் அதற்கு முன்பே பிரதிவாதிகளின் தகப்பனாரின் பெயரில் தான் பட்டா இருந்தது என்றாலும் அதை ரத்து செய்யாமல் நான் என் பெயருக்கு பட்டா மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த இடம் தற்பொழுது காலியிடமாக உள்ளது என்றால் சரியல்ல. அதில் நான் காய்கறி விவசாயம் செய்து வருகிறேன். நீங்கள் தவறுதலாக சொல்கிறீர்கள் அந்த அனுபவம் இன்று வரை பிரதிவாதிகளின் பெயரில் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் தாவா சொத்து எனது அனுபவத்தின் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து என்றாலும் அது எந்த காலத்திலும் எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா உரிய உத்தரவின் பேரில் தான் மாற்றப்பட்டிருந்தது என்றாலும் நான் சொல்வது போல் மோசடியாக மாற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**District Munsif,**
**Manamadurai.(FAC)**